
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 1 | ஜூலை 1988 | இதழ் 7




வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்து நாதரின் சபையார்,

2, [illegible] வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30 — 11-00—காலை ஆராதனை

,, : ,, 11-00 — 12-00—ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15 — 8-30—மாலை ஆராதனை

செவ்வாய் : மாலை 7-15 — 8-30—ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)

புதன் : மாலை 5.30 — 7-00—சகோதரிகள் ஐக்கியக் கூட்டம் (ஒருவாரம் விட்டு ஒரு வாரம்)

வியாழன் : மாலை 7-15 — 8-30—வேதாகம ஆய்வு

சனி : மாலை 7-00 — 9.00—மன்ருட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


சீஷத்துவத்தின் விலை 1

கிறிஸ்து மீண்டும் வரும்போது உலகில் விசுவாசத்தைக் காண்பாரா? 6


கொத்தி எருப்போடுவோம், வாரீர்! 10

விசுவாசப் போராட்டம்! 15

பழைய ஏற்பாடும் கிறிஸ்தவர்களும் 18

செத்த ஈக்கள் 24

புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பின் திட்டம் 27

# THIRUMARAI AASAAN

**Editor:**
**J C. CHOATE**

**Managing Editor:**
**E. Z. SELVANAYAGAM**

**Published by Church of Christ**
**2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India**

**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol. 1 July 1988 Issue 7

**ஆசிரியவுரை**

# கிறிஸ்துவத்தின் விலை

தற்காலத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிற மக்கள் தொகை பெருகிக் கொண்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியே. ஒருவன் கிறிஸ்தவத்தைத் தழுவுவது என்பது கடினமல்ல, ஒருவன் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து பாவத்திலிருந்து மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று திருமுழுக்குப் பெற்றுக் கொண்டால் போதும் என்று வேதாகமம் கூறுகிறது. மாற்கு 16 : 16; அப் 2:38 சில வேளைகளில் மனதுக்குள் ஏற்படும் மாற்றங்களை மனிதர்கள் பார்க்க வாய்ப்பில்லை என்ற உண்மையை தெரிந்துகொண்டு பல்வேறு காரணங்களுக்காக கிறிஸ்தவத்தை தழுபவர்களும் உண்டு.

ஆனால் தொடர்ந்து கிறித்துவ அறநெறிகளைப் பின்பற்றி வாழ்வது என்பது மிகவும் கடினம். அதனால்தான் அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலர். என்பதை மெய்ப்பிக்கும் வகையில் பலர் பின்வாங்கிப் போகின்றனர். உண்மையை சொல்வதென்றால் கிறிஸ்தவ வாழ்க்கை என்பது சவால் நிறைந்த போராட்ட வாழ்க்கை.

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் ஏராளமான மக்கள் அவர் செய்கிற அற்புதங்களையும், பிரமிப்பூட்டும் செயல்களையும் கண்டு அவர் பின்னர் சுற்றி நடந்தனர். ஆனால் அவர் தன்னுடைய நோக்கத்தையும் தம்மை பின்பற்றுபவர்களின் கடமைகளைப் பற்றியும் விவரிக்கத் தொடங்கின்போது இது கடினமான உபதேசம், யார் இதை கேட்பார்கள் என்றார்கள். யோ 6 : 66.

பலர் தவறாக எண்ணிக் கொடிருப்பது போல் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிற அனைவருமே ஜீவ கிரீடத்தை பெற்றுக் கொள்ள முடியாது. "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது உனக்கு ஜீவ கிரீடத்தை தருவேன்." என்பதே நிபந்தனையுடன் கூடிய வாக்குத்தத்தம். வெளி 2:10 கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு ஆசீர்வாதத்துக் குரிய வாழ்க்கை என்பது மெய்யே. ஏனெனில் அதில் பாவமன்னிப்பு உண்டு மோட்சலோகத்தில் நித்திய ஜீவனோடு மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு வாழ்வோம் என்ற நம்பிக்கையுண்டு. மேலும் பல ஆவிற்குரிய ஆசீர்வாதங்கள் உண்டு, தேவனுக்கு கீழ்ப்படிந்து அவரை நேசிக்கிற பிள்ளைகளுக்கு தெய்வீக பாதுகாப்பு உரிமையோடு ஜெபிக்கிற சிலாக்கியம், தங்கள் வாழ்க்கையில் சம்பவிக்கிற நிகழ்ச்சிகள் சிலவற்றில் ஆரம்பத்தில் குழப்பம் சஞ்சலமாக இருந்தபோதிலும் முடிவில் அனுகூலமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும் என்பன போன்ற உறுதி-மொழிகளை வேதத்தில் வாசிக்கிறோம். மத் 7:21; ரோமர் 8:28.

அதே நேரத்தில் கிறிஸ்தவ அற நெறிகளை ஏற்றுக் கொள்ள விரும்புகிற மக்களுக்கு இயேசு விதிக்கும் நிபந்தனைகளைப் பாருங்கள். ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை அனுதினம் எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக்கடவன்' என்பதாகும். லூக் 9 : 23

முதலாவது "ஒருவன்" என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம்- இது உலகில் உள்ள எந்த ஒரு மனிதனையும் குறிக்கும். யோ 3:16ல் காணப்படுகிற 'எவன் ஒருவன்' என்ற வாக்கியத்தொடரும் இதையே தான் சுட்டுகிறது. அதாவது இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப் பட்டு மரித்தது ஒரு குறிப்பிட்ட இனத்தாருக்கோ அன்றி வகுப்பாருக்கோ நாட்டாருக்கோ அல்ல. உலக முழுவதிலும் வாழ்கிற மக்களுக்காகத் தான், அப்பாடுகளை ஏற்றுக்கொண்டு மரித்தார். ஆகையால் அவரு டைய அன்பழைப்பை ஏற்றுக்கொண்டு யார் வேண்டுமானாலும் அவ-ரிடத்தில் வரலாம். அடுத்து நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய வேறொரு வார்த்தை "விரும்பினால்" அதாவது கிறிஸ்தவத்தை தழுவ நினைப்பவர்கள் யாருடைய கட்டாயத்திற்கும் அடிபணிந்து அப்படிச் செய்யக்கூடாது. அவரவருடைய மனவிருப்பத்தின்படி தான் செய்ய வேண்டும். புதிய ஏற்பாட்டின் மூன்றாவது நூலில் சகேயு என்ற ஒரு மனிதனைப் பற்றி வாசிக்கிறோம். அவனுக்கு இயேசுவைக் காண வேண்டும் என்ற விருப்பம் வெகுநாளாகவே இருந்து வந்தது. ஒரு நாள் இயேசு அவன் வாழ்ந்த தெரு வழியாக வந்தார். அந்த வழி-யாக வருகிறார் என்று கேள்விப்பட்ட பொழுது அவரை எப்படியா-வது பார்த்துவிட வேண்டும் என்று தீர்மானித்தான். ஆனால் அவனோ குள்ளன், மக்கள் திரள் அவரை மறைத்துக் கொண்டிருந்தது. அவன் அதனால் மனம் உடைந்து தன் விருப்பத்தை விட்டுவிடவில்லை வேதம் அதைப்பற்றி விவரிக்கும் போது "அவன் முன்னாக ஓடி

அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்'' என்று சொல்லுகிறது. இயேசு அந்த குறிப்பிட்ட இடத்துக்கு வந்தபோது அண்ணாந்து பார்த்து, சகேயுவே, கீழே இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார், இயேசு சகேயுவோடு இருந்தபோழுது சகேயு ஆண்டவரை நோக்கி, ஆண்டவரே என் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கியிருந்தால் நாலத்தனையாகத் திருப்பி செலுத்துகிறேன் என்றான். லூகா19:3-5,8

சகேயு இயேசுவைக் காணவேண்டும் என்ற விருப்பமுடையவனாக மட்டுமல்ல அவரை விசுவாசித்து இயேசுவின் தொண்டனாவதற்குரிய விலையையும் தரும் அளவிற்கு தன்னுடைய வாழ்க்கையையே மாற்றிக் கொள்ள ஆயத்தமாயிருந்தான். அவனுடைய விருப்பம் வெறும் எண்ணத்துடன் நின்றுவிடாமல் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும் அளவுக்கு ஆயத்தப்பட்டு விட்டது.

இயேசுவிடம் வந்த இன்னொரு மனிதனைப் பார்க்கலாம். அந்த மனிதனுக்கு நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கொள்ளை ஆசை. ஆனால் அதற்குரிய விலையைக் கொடுக்க மறுத்துவிட்டு துக்கத்துடனே போய்விட்டான் அவனை மாற்கு எழுதிய நற்செய்தி நூலில் பார்க்கிறோம். "அவன் ஓடிவந்து முழங்கால் படியிட்டு நல்ல போதகரே, நான் நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ள என்ன செய்யவேண்டும். என்று கேட்டான் அவனிடத்தில் நாம் பாராட்ட வேண்டிய பல நல்ல பண்புகள் தென்படுகின்றன. நடுத்தெரு என்றும் பாராமல் ஓடிவந்தது அவனது ஆர்வத்தையும் முழங்கால் படியிட்டது அவனது தாழ்மையையும், நல்ல போதகரே என்று அழைத்தது அவனுடைய விவேகத்தையும் காட்டுகிறது. ஆயினும் ஆண்டவர் அவனைப் பார்த்து, உன்னிடத்தில் ஒரு குறை உண்டு. நீ போய் உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று தரித்திரருக்கு கொடு. அப்போது பரலோகத்திலே உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும் பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றி வா என்றார். மாற் 10:17, 21, அவன் என்ன செய்தான் தெரியுமா? அவன் மிகுந்த ஆஸ்தியுடையவனாய் இருந்தபடியால் இந்த வார்த்தைகளைக் கேட்டு மனமடிந்து துக்கத்தோடு போய்விட்டான். வ : 22 அந்த மனிதன் நித்திய வாழ்வை விரும்பினான். ஆனால் அதற்குரிய முழு விலையையும் தர மறுத்துவிட்டான். ஒரு பொருளை அல்லது ஒரு நிலையை அடைவதற்கு ஒருவர் விரும்புவது தவறல்ல. பலர் அதைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான முழுவிலையையும் கொடுக்காமலேயே அதை எப்படியாவது ஆண்டவர் கொடுத்து விடுவார் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அது இயலாது என்கிறார் இயேசு லூக் 13:24.

வேறுஒரு இடத்தில் சீஷத்துவத்தின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் ஒருவன் என்னை பின்பற்றிவர விரும்பினால், தன்னைத்-தானே வெறுக்க வேண்டும் என்கிறார். தன்னைத்தானே வெறுக்க வேண்டும் என்றால் தன்னுடைய விருப்பு வெறுப்புக்களை பின்னுக்கு தள்ளிவிட்டு கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். என்னுடைய விருப்பப்படியல்ல ஆண்டவரே, உம் விருப்பப்படி என்ற நிலை எய்த வேண்டும். தன்னைத்தான் வெறுப்பது என்பது கிறிஸ்தவ ஜீவியத்தில் முக்கியமானது ஆகும். அதே சமயத்தில் கடினமானது. ஒருவன் தன்னைத்தானே வெறுக்கும் நிலைக்கு வரும்போது கிறிஸ்-துவை முன் வைக்கிறான் என்று பொருள். அவன் செய்கைகள் அனைத்தும் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் வண்ணம் இருக்கும். அவன் செய்கிற எல்லா காரியங்களையும் கர்த்தருடைய சித்தத்திற்கு ஏற்ற வகையில் செய்ய விரும்புவான். அதனால்அன்றோ. "தகப்பனையாவது, தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல, மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்-கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல என்கிறார் இயேசு. மத் 10:37

ஒரு உண்மைக் கிறிஸ்தவனுக்கு கர்த்தருடைய சித்தம் செய்வது அன்றி தன்னுடைய இஷ்டம் போல் செய்வதா வேண்டாமா? என்ற சந்தேகமே வரக்கூடாது. மரணத்தையே சந்திக்க நேர்ந்தாலும் ஆண்டவருடைய சித்தம் தான் என்றைக்கு அவருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டானோ அன்றே அந்த விஷயம் முடிவாகிவிட்டது. கிறிஸ்து முன்னே; நான் அவர் பின்னே.

நாம் ஏற்கனவே பார்த்த லூக்கா 9:23ல் "ஒருவன் என்னை பின்பற்ற விரும்பினால்தன்னைத்தானே வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அனுதினமும் என்னை பின்பற்றி வரவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அனுதினம் தன்சிலுவையை சுமக்க விரும்-பாதவன் கிறிஸ்தவனாக இருந்து. அந்த பணக்கார வாலிபனைப் போல், பல நற்பண்புடையவனாக இருந்தாலும் பயன் இல்லை. கிறிஸ் தவம் சிலுவையின் மார்க்கம். இங்கே சிலுவை என்று குறிப்பிடும் போது மரத்தினாலோ, உலோகத்தினாலோ அல்லது கல்லினாலோ செய்யப்பட்ட சிலுவை அடையாளச் சின்னத்தை கழுத்தில் மாட்டிக் கொள்ளுதல் என்று பொருள் அல்ல. இங்கே சிலுவை என்றால்; பாடு அனுபவித்தல் சுயவெறுப்பு, கீழ்ப்படிதல் தியாக உணர்வு என்பவை களைக் குறிக்கும். கர்த்தர் இங்கே சொல்ல விரும்புவது என்னவெனில் ஒருவன் என்னை பின்பற்றி வர விரும்பினால் தினமும் துன்பப் படுவதற்குத் தயாராக சரீரத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் ஒடுக்கவேண்டும் என்று பொருள்.

கர்த்தருடைய சித்தம் எது என்று அறிந்து தினமும் அதன்படி நடக்கவேண்டும் தினமும் தியாக உணர்வுடன். வாழவேண்டும்.

பலர் கிறிஸ்தவத்தை ஞாயிற்றுக் கிழமை மார்க்கமாக மாற்றி விடுகின்றனர். அது தவறு. கிறிஸ்தவ மார்க்கம் அன்றாட மார்க்கம் அதாவது அனுதினம் நம்முடைய வாழ்க்கையின் சகல காரியங்களையும் தேவ ஆலோசனைப்படி நடக்க வேண்டும் தினமும் என்ற வார்த்தையைக் கவனியுங்கள்.

அடுத்து பின்பற்றக் கடவன் என்ற இறுதி வாக்கியத் தொடரைக் கவனியுங்கள். ஆண்டவரை பின்பற்றுவது என்று முடிவு செய்து விட்டால் அவரை மட்டும் பின்பற்ற வேண்டும். மனிதர்கள் எவ்வளவு பெரியவர்களாயிருந்தாலும் இயேசுவின் வார்த்தைக்கு மாறாக நடந்தால் அவர்களைப் பின்பற்றக் கூடாது. மனசாட்சியைப் பின்பற்றுகிறேன் என்பர் சிலர். அதுவும் தவறு. மனச்சாட்சி என்பது சில வேளைகளில் தவறாகக் கூட இருக்கலாம். இன்னும் கர்த்தரை விட்டுவிட்டு மனிதர்களால் உருவாக்கப்பட்டு தேவனுடைய ஆலோசனைகளைப் பின்னுக்குத் தள்ளும் சபை சட்ட திட்டங்களையும் பின்பற்றுகின்றனர். அதன் காரணமாகத்தான் இத்தனை குழப்பம், முரண்பாடுகள். கிறிஸ்தவத்துக்குள், இத்தனை பிரிவினைகள் எப்படி வந்தது என்று என்றாவது சிந்தித்துப் பார்த்தீர்களா?

தற்காலத்தில் நாம் காண்கிற மனிதர்களையும் அவர்கள் வகுத்த செயல்களையும் பின்பற்றுவதினால் அல்லவா? கர்த்தருடைய சத்தத்துக்கு மட்டுமே செவிகொடுப்போம். நம்மை நாமே வெறுத்து கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்போம். நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு அனுதினமும் அவர் பின்னே செல்வோம். அப்படி நாம் செய்யவிரும்பாவிட்டால் தவறானபாதையில் போய் அபாயத்தை சந்திக்க நேரிடும்.

**J. C. சோட்**

## உண்ணா நோன்பு மேற்கொள்ளும்

| சரியான முறை | தவறான முறை |
| --- | --- |
| நீ உண்ணா நோன்பு மேற்கொள்ளும் போது இறைவனுக்கு மட்டும் உன் மன்றாட்டுத் தெரிந்தால் போதும் என்று எண்ணி உன் தலைக்கு எண்ணெய் பூசி உன் முகத்தைக் கழுவு. | நீங்கள் உண்ணா நோன்பு மேற்கொள்ளும் போது மற்றவர்களின் கவனத்தை ஈர்க்க முகவாடலாய் இராதே அப்படிச் செய்தால் பயன் இல்லை. |

இரண்டு எஜமான்களுக்கு ஒருவன் ஊழியம் செய்ய முடியாது. அதுபோல இறைவனுக்கும் பிசாசுக்கும் நீங்கள் தொண்டு செய்ய முடியாது.

# கிறிஸ்து மீண்டும் வரும்போது உலகில் விசுவாசத்தைக் காண்பாரா?

''..........ஆகிலும் மனித குமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?'' (லூக்கா 18:8) என இயேசுகிறிஸ்து ஒரு கேள்வி கேட்டார். இது ஒரு நல்ல கேள்வி. வேதாகமப் போதனைகளின் அடிப்படையில் இதற்கு விடை காண இங்கு முயற்சிப்போம்.

உலகம் முற்றிலுமாக கெட்டுப்போய் கிடப்பதாலும், தவறான மத போதனைகள் மலிந்து காணப்படும் நிலையிலும், இயேசு கிறிஸ்து திரும்பி வருகையில் விசுவாசிகள் யாரையாவது அவர் காண்பாரா என நாம் அதிசயப்படக்கூடும். உலகில் விசுவாசம் அழிந்து போகும் நிலையே அவர் மீண்டும் வரக் காரணமாக இருக்குமோ? அல்லது, இவ்வுலகில் அவரின் தொண்டர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து போன நிலைகண்டு, காரியங்கள் தொடர்ந்து இவ்வாறு நடப்பதை தேவன் சகித்துக் கொள்ள மாட்டாரா? சோதோம் கொமாரா பட்டணங்கள் மிகவும் கெட்டுப்போய் நல்லவர் பத்து பேர்கள் கூட-தேராத ஒரு கட்டம் வந்ததும் தேவன் அவற்றை அழிக்க முடிவெடுத்-தார் என்பதை இங்கு நினைவு கூறுகிறோம்.

தேவன் திரும்பி வரும் காலம்பற்றி பலர் தாங்களாகவே முடிவுக்கு வந்துள்ளதை நாம் அறிவோம். அவர்கள் வேதாகமம் போதிக்காத பல விஷயங்களைச் சொல்லுகிறார்கள். நாம் அவ்விதத் தவறைச் செய்ய விரும்பவில்லை ஆனால் அவர் திரும்பி வருவதைப்பற்றி பல காரியங்களை நாம் நிச்சயமாக அறிய முடியும் அவற்றில் சிலவற்றை இங்கு கவனிப்போம்,

முதலாவதாக, இயேசு மீண்டும் வருகிறார் அவ்வாறு அவர் வாக்களித்துள்ளார். தான் போனால் மீண்டும் வருவதாக அவர் கூறியிருக்கிறார் (யோவான் 14 : 1-3). அவர் போனார் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியும். அவரின் உறுதிமொழியின் அடிப்படையிலும், அவர் வாக்கு மாறாதவர் என்ற நம்பிக்கையிலும், மீண்டுமாக அவர் வருவதை நாம் நம்புகிறோம். கிறிஸ்து திரும்பி வருவதை வேதாகமத்தின் பல வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இரண்டாவதாக, அவர் மீண்டும் வருவதாக அவருடைய வசனங்கள் கூறியபோதிலும், இவ்வுலகில் அவர் காலூன்றுவார் என எங்கும் கூறப்படவில்லை.

லூக்கா 18:8ம் வசனம் கூட, அவருடைய வருகையின்போது உலகத்தின் விசுவாசம் பற்றிய கேள்வியே அல்லாது, அவர் உலகத்திற்கே வருவதாக கூறவில்லை. இப்பூமியில் இறங்காமலேயே அவர் வரமுடியும் என்பதை நாம் உணர வேண்டும்.

கிறிஸ்து வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபின், வெண் ஆடை தரித்த இருவர் அங்கு தோன்றி, அங்கு நின்று கொண்டிருந்தவர்களிடம் கேட்கின்றனர். கலிலேயரான மனிதரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றனர் (அப்போஸ் 1 : 11). இவ்வுலகத்திற்கு வருவார் என்று இங்கு நிச்சயமாக சொல்லப்படவில்லையே. எவ்வாறு சென்றாரோ அவ்வாறு கிறிஸ்து வருவார் என்று தான் கூறப்பட்டுள்ளது. மேகங்களிடையே அவர் மோட்சத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். அவ்விதமே மேகங்களினூடே அவர் ஒருநாள் மீண்டுமாக வருவார். கிறிஸ்து இவ்வுலகத்திற்கு இறங்கி வந்து ஜெருசலேமில் இருந்து கொண்டு 1000 ஆண்டுகள் ஆட்சி செய்வார் என பல் விசுவாசிகள் எண்ணுகின்றனர். நல்லவர்கள் அவருடைய ஆளுகையில் இருப்பர், கெட்டவர்களோ தள்ளப்படுவர் என அவர்கள் கூறுகின்றனர். இவையெல்லாம் மனித கற்பனையில் உருவானவகளே.

இவ்வுலகத்திற்கு கிறிஸ்து மீண்டும் வரவேண்டிய அவசியம் என்ன? வேதாகமம் சொல்லுகிறது. மீண்டுமாக கிறிஸ்து வந்து அவருடைய மக்களை பிரித்தெடுத்து மோட்சத்திற்கு அழைத்து செல்வதேயன்றி, அவர்களோடு இவ்வுலகில் ஆட்சி செய்ய அல்ல, மேலும், அவர் வருகையில் இவ்வுலகமும் வானமும் அவற்றிலுள்ள எல்லா பொருட்களும் எரிக்கப்பட்டிருக்கும். பேதுரு கூறுகிறார். ''இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந் தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போம்'' (2 பேதுரு 3 : 7, 10).

இவ்வசனங்களிலிருந்து நாம் புரிந்து கொள்வது, இயேசுகிறிஸ்து மீண்டும் வருகையில் வானங்களும் பூமியும் அழிக்கப்பட்டு விடும். அப்படியானால் ஜெருசலேமும் அழிக்கப்பட்டிருக்கும் அல்லவா? எனவே அவரோ அவரைப் பின்பற்றுவோரோ இப்பூமியில் ஒரு இராட்சியத்தை நிறுவப்போவதில்லை. உண்மையைச் சொல்லப் போனால்அவர் இப்போது ஆளுகிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 1 : 5); கிறிஸ்தவர்கள் ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் அவரோடு ஆளுகை செய்து கொண்டிருப்பதாக வெளி 1 : 6 நமக்குத் தெளிவாக்குகிறது.

மூன்றாவதாக, கிறிஸ்து மீண்டும் வருவார் என்பது நமக்குத் தெரியும். என்றாலும் எப்போது இது நடக்கும் என்பது தெரிய எவ்

வழியும் இல்லை. இதுபற்றி கிறிஸ்து கூறியது என்ன? "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" (மத்தேயு 25:36). தேவன் திரும்பி வரும் காலம் பற்றி பலர் பல அபிப்பிராயங்களை கூறுகின்றனர். ஆனால் அந்த நாளையும் நாழிகையையும் தேவன் ஒருவர் தவிர பரலோகத் தூதர்களோ, ஏன் இயேசு கிறிஸ்துவே கூட அறியாவிட்டால் நீங்களும் நானும் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? வேதாகமத்தை முற்றிலுமாகப் படித்து இக்காரியம் பற்றிய சகல செய்திகளையும் சேகரித்து, இரட்சகர் திரும்பிவரும் நேரத்தை நமக்குக் கூற இயலுமா? நிச்சயமாக முடியாது.

நமக்குத் தெளிவாகக் கூறப்பட்டதெல்லாம், கிறிஸ்து அறியாத நேரத்தில் வருவார் (2 பேதுரு 3:10); மேகங்களின் நடுவில் வருவார் (1 தெச 4 : 17); தேவனை அறியாதவர்களுக்கும், சுவிசேஷத்திற்குக் கீழ்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையை செலுத்த வருவார் (2 தெசெ. 1:7-9); அதேவேளை மரித்தோர் எல்லோரும் பிரேதக்குழி-யினின்றும் எழுந்தருளுவர் (யோவான் 5 : 28, 29), மனித குமாரன் அவருடைய அரசில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேகரிக்க தம்முடைய தூதர்களை அனுப்புவார் (மத்தேயு 13 : 41); கடைசியாக, தேவனுடைய வசனத்தின்படியே எல்லோரும் நியாயம் தீர்க்கப்படுவர் (யோவான் 12:48; 2 கொரி 5:10); அப்போது நீதிமான்கள் நித்திய ஜீவனை அடையவும் கெட்டவர்கள் நித்திய ஆக்கினை பெறவும் செய்வர் (மத்தேயு 25:46).

கடைசியாக, கிறிஸ்துவின் இரண்டாவது வருகையின்போது நடைபெறும் மற்றும் சில காரியங்களைப் பார்ப்போம். அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்தவர்களுக்குக் கூறுகிறார். 'அன்றியும் சகோதரரே, நித்திரை-யடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களாக மற்றவர்-களைப்போல துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசு-வானவர் மரித்து பின் எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரை அடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூடக் கொண்டு வருவார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது ; கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானிலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடு கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு; இவ்விதமாய் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினா-லேயே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள். (1 தெசெ 4:13-18)

மேற்கூறிய வாசகங்களிலிருந்து பல உண்மைகள் நமக்குத் தெளிவாகின்றன. முதலாவதாக, கிறிஸ்து மீண்டும் வருவார். இரண்டாவது அவர் வானத்திலிருந்து வருவார்; அவரை சந்திப்பவர்கள் மேகத்தின் நடுவில் சந்திப்பர், இவ்வுலகில் அல்ல. மூன்றாவதாக, கிறிஸ்துவுக்குள் இருப்போர், அதாவது விசுவாசிகள், முதலில் கல்லறையிலிருந்து எழுவர். நான்காவதாக, தேவன் திரும்பி வருகையில் உயிரோடிருப்பவர்கள் அவரை மேகத்தில் சந்தித்து அவரோடு சதாகாலமும் இருப்பர்.

எனவே, "கிறிஸ்து மீண்டும் வருகையில் உலகில் விசுவாசத்தைக் காண்பாரா என்ற நமது ஆரம்ப கேள்விக்கு **ஆமாம்** என்பதே நிச்சயமான விடையாகும். விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களின் அப்போதைய எண்ணிக்கை பற்றி நாம் அறிவோம். அது அதிகமாக இருக்கும் என்று நாம் எண்ணக்கூடும். ஆனால் மிகவும் கெட்டுப்போன இவ்வுலகை தேவன் காணும்போது அந்த எண்ணிக்கை குறைவாகவே இருக்கலாம். எனவே அவருடைய மக்களை (ராஜ்யத்தை) சேகரித்து தேவனிடம் ஒப்படைக்க அவருடைய குமாரனை அனுப்புவார்'

நண்பரே! தங்கள் நிலை என்ன? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? நீங்கள் தேவனின் விசுவாசமுள்ள பிள்ளையா? தேவன் மீண்டும் வருகையில் விசுவாசத்துடன் மரித்தோர் கூட்டத்தில் அல்லது உலகத்தில் அச்சமயம் இருக்கும் குறைந்த எண்ணிக்கையுள்ள விசுவாசிகளின் ஊடே உங்களைக் காண்பாரா? எல்லாமே முடிந்தது என்பதை அந்த நேரம் நமக்குத் தெரிவிக்கிறது. நியாயவான்களுக்கு இரட்சிப்பு; கெட்டவர்களுக்கு நித்திய ஆக்கினை. தேவனிடம் மன்னிப்பு பெறவோ அல்லது அவருக்கு கீழ்ப்படியவோ அந்த கடைசி நேரத்தில் இயலாது. தேவனுடைய திட்டத்திற்கு அடிபணிந்து அதற்கான முயற்சிகளை எடுக்க இதுவே தருணம். தவறவிடாதீர். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## ஜெபம் பண்ணுவதில்

| சரியான முறை | தவறான முறை |
|---|---|
| உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, கதவைப் பூட்டி அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவருக்குத் தெரியும். | மாயக்காரரைப் போல் மனுஷர் காணும்படியாக ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் செய்யாதே அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதே. |

# கொத்தி எருப்போடுவோம் வாரீர்!

இன்றைய கிறிஸ்தவ மக்களிடையே காணப்படும் ஒருவித சோர்வையும் மெத்தனத்தையும் கண்டும் கனிகொடாத நிலையையும் கேட்டும் கவலைப்படாமல் இருக்கிற உண்மைக் கிறிஸ்தவர்கள் மிகச் சிலரே இருக்கமுடியும். இந்த இழி நிலைக்கு யார் காரணம் என்று கேட்டால் ஒருவர் மற்றவரையும் மற்றவர் அடுத்தவரையும் சுட்டிக் காட்டி விட்டுத் தங்கள் பொழிப்பைத் தட்டிக் கழிக்க முற்படுவார்கள். எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் நிச்சயமாக ஒரு முடிவுக்கு வர முடியும் பொதுவாகவே கிறிஸ்தவர்கள் தங்களுடைய அழைப்பின் மேன்மையை நன்கு உணர்ந்து கிறிஸ்துவின் உயர்ந்த வாழ்க்கை நெறிகள் அடங்கிய உபதேசச் சட்டங்களைக் கடைப்பிடிக்காமல் அலட்சியம் செய்து தங்கள் மனம்போன போக்கில் வாழ்ந்து வருகின்றனர் என்பதே அம்முடிவு.

அப்படியானால் அந்த தவறை எப்படி களைவது, எங்கிருந்து தொடங்குவது? என்பன போன்ற கேள்விகள் எழும்புகின்றன. இந்த வேதனைக்குரிய நிலை உருவானதற்கும் இன்று அது வளர்ந்து கனன்றெறிவதற்கு இயலுமா? என்று மலைத்து நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதற்கும் பல காரணங்களைச் சொல்லலாம் என்றாலும் தேவனுடைய ஊழியக்காரர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டு தங்கள் வாழ்க்கையால் அதை மறுதலித்துக் கொண்டிருக்கிற மக்களுக்குக் கணிசமான பங்கு உண்டு என்று சொன்னால் அது மிகையாகாது. தன்னை ஒரு வரம் பெற்ற ஊழியக்காரர், தேவனோடும் கிறிஸ்துவோடும் நேரடியாக பேசுகின்ற அருள்பெற்றவர், என்று மக்கள் மதிக்க வேண்டும் என்ற சுயவிளம்பரத்துக்காக வீணர்கள் சிலரை தங்கள் வசம் சேர்த்துக்கொண்டு சுவிசேஷத்தை கேலிக் கூத்தாக்கி தெருவில் வேடிக்கை காட்டும் மோடி மஸ்தான்களைப்போல பாமர மக்களையும் சபலபுத்தி உள்ளவர்களையும் மயக்கி இதுதான் இயேசுபிரான் காட்டிய வழி, இதுதான் இரட்சகரின் இலட்சியம் என்று பிதற்றித் திரிகின்றனர், அவர்கள் சீஷத்துவத்தின் விலையை, அதிலுள்ள அற்பணிப்பு, தியாக உணர்வை அதன் தூய்மை நிலையை விளக்கிக் கூற மாட்டார்கள். கிறிஸ்துவை பின்பற்ற விரும்புகிறோம் என்று சொல்பவர்களின் கூற்று உண்மையாகவே இயேசுவின் அரிய கருத்துக்களை புரிந்து எற்றுக்கொண்டதனால் ஏற்பட்ட முடிவுதானா என்பதைக் கவனிக்க மாட்டார்கள். அப்படி நாம் சொன்னால், ஐயோ, பாவம் அவன் இயேசுவை ஏற்றுக்கொள்ள விரும்புகிறான். நாம் அதற்கு மறுப்புச் சொல்லலாமா, இருதயத்தின் நினைவுகளை நாம் அறியக்கூடுமா? அது தேவனுடைய காரியமல்லவா என்று பசப்புவர். ஏராளமான ஆத்துமாக்களை ஆதாயம் செய்ததாக வேதம் நற்சாட்சி பகருகின்றன யோவான் ஸ்நானகனும் நமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவும் இது விஷயத்தில் எப்படி நடந்துகொண்டார்கள் என்று கவனிப்போம்.

அரசனையே அதட்டிக் கேட்டு அவனுடைய கோபத்திற்கு ஆளான அஞ்சா நெஞ்சன் யோவான்ஸ்நானகன் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வந்த பரிசேயர்களையும், சதுசேயர்களையும் பார்த்து "விரியன் பாம்புக்குட்டிகளே. என்று கடுமொழியால் சாடி மனந்திருந்தலுக்கேற்ற கனிகொடுங்கள் என்று " அறிவுரையும் கூறுகிறான், மத் 3:18

சாந்தத்தின் உறைவிடமாகிய நமது ஆண்டவராகிய இயேசு அந்த அளவு சுடுசொல்லால் தாக்கவில்லையே யொழிய இம்முக்கியமான பிரச்சனையில் தனது ஆலோசனையை கூறுமலில்லை. லூக்கா சுவிஷேசத்தில் இதை குறித்து ஒரு உவமையை சொல்லியிருக்கிறார் (லூக்கா 14 : 25—33)

ஒருவனுடைய பெற்றோர்கள், சகோதர சகோதரிகள், மனைவி குழந்தைகள் ஏன் ஒருவனுடைய உயிரே கூட கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் ஒருவனுக்கு பெரிதாகத் தோன்றக் கூடாது என்றும் கிறிஸ்துவைப் பின்பற்றுதல் என்பது இன்பமான உல்லாசமான பொழுது போக்கு அன்று என்றும் துன்பமும் தொல்லைகளும் நிறைந்த வாழ்க்கை நெறி என்றும் விளக்கியுள்ளார்.

அப்படி அவர் அறிவுறை கூறியதோடு நிறுத்திக்கொள்ளாமல் தான் உதவ நேர்ந்த எல்லா மனிதரிடத்திலும் தன்னைப்பற்றியும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றியும் அக்கறை காட்டுகிறாரா என்று கவனித்திருக்கிறார். எடுத்துக்காட்டாக லாசரு என்பவரை உயிரோடு எழுப்பிய நிகழ்ச்சியை எடுத்துக்கொள்வோம். நான்கு தினங்களுக்குப் பிறகு அவரை உயிரோடு எழுப்பவேண்டும் என்ற நோக்கத்தோடு கல்லறைக்குச் செல்லுகிறார். ஆனால் தன்னுடன் வந்து சுற்றிலும் நிற்கிறவர்களைப் பார்த்து 'கல்லை எடுத்துப் போடுங்கள்,' (யோவான் 11 : 39) என்று கட்டளையிடுகிறார். ஏன் மரித்தவனுக்கு உயிர்கொடுக்கும் வல்லமை பெற்ற நமது ஆண்டவருக்கு கேவலம் ஒரு கல்லைப் "புரண்டு வழிவிடு" என்று கூற முடியாதா ? சிந்தித்துப் பாருங்கள் ! கர்த்தர் தான் செய்யப்போகிற இந்த மகத்தான காரியத்தை அவர்கள் புரிந்துகொண்டு விசுவாசிக்கவும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் மனிதனுடைய பங்கும் ஓரளவுக்கு இருக்கிறது. வெறுமனே கைகளைத் தட்டி தாளம் போடுவதனாலேயே பரலோகம் போய் சேர்ந்துவிட முடியாது என்பதையும் உணர்த்தவே அவ்வாறு கூறினார் என்று கூறமுடியும்.

அப்படியே தயவு செய்து யோவான் 9-ம் அதிகாரத்துக்கு வாருங்கள், அங்கே ஒரு பிறவிக் குருடனை சந்தியுங்கள் அவன் மெத்தப்படித்த பட்டதாரி அல்லன். சமுதாயத்திலே செல்வாக்குப் பெற்ற பெரிய மனிதனும் அல்லன். ஆயினும் அவனுடைய விசுவாச உறுதியும், கொள்கைப்பிடிப்பும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு

மாபெரும் விளக்கமாக அமைந்திருக்கிறதைப் பாருங்கள். முதலாவதாக அவனிடத்தில் காணப்படுகிற சகிப்புத் தன்மையை கவனியுங்கள். எச்சில் என்றாலே அருவருப்பு தோன்றுகிறது. அப்படிப்பட்ட எச்சிலை தரையிலே துப்பி, சேறுண்டாக்கி அதை ஏற்கனவே குருடாக இருக்கிற கண்ணில் பூசியபின்னர் "நீ சிலோவாம் குளத்திற்குப் போய்க் கழுவி பார்வையடை" என்று கூறுகிறார். ஐயோ, பாவம்! அவனோ ஏற்கனவே குருடன். அவன் கண்களிலே சேற்றைப் பூசி குளத்திலே போய் கழுவு என்கிறாரே வழுக்கி விழுந்துவிட்டால் என்ன செய்வது? என்று நீங்களும் நானும் கூட அங்கலாய்க்கிறோம். ஆனால் இரக்கத்தில் ஐசுவரியமுள்ள கர்த்தர் அப்படிச் செய்யச் சொல்லும் போது காரணம் நமக்கு விளங்குவதில்லையல்லவா? அதுவும் எத்தனையோ பேய் பிசாசுகளைத் துரத்தும் போதும் கொடிய வியாதியால் பாதிக்கப்பட்ட மக்களை சுகப்படுத்திய போதும் கூட வாய்ச்சொல்லைத் தானே பயன்படுத்தினார், என்று அறியும்போது நமது வியப்பு இன்னமும் பன்மடங்கு அதிகமாகிறது. ஆனால் அந்த பிறவிக் குருடன் எவ்வித முறுமுறுப்போ, சலிப்போ இல்லாமல் கீழ்ப்படிகிறான். பார்வையடைந்தவனாகத் திரும்பி வருகிறான்.

நாமும் கூட எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தபோதிலும் தேவனுக்குக் கீழ்படியக் கற்றுக்கொள்ளவேண்டும். தேவன் தம்மை நேசிக்கிறவர்கள் எவ்வித நிபந்தனையுமின்றி தமக்குக் கீழ்படியவேண்டும். என்று விரும்புகிறார். இரண்டாவதாக நாம் அவனிடத்திலே கவனிக்கக்கூடிய மற்றொரு நற்பண்பு, சுறுசுறுப்பு. வெகு குறுகிய நேரத்தில் அநேக மக்கள் அவன் பார்வையடைந்து மகிழ்ச்சியாக இருப்பதை அறிந்து அவனிடத்தில் விசாரிக்கிறார்கள். அவர்கள் யாவருக்கும் தான் பார்வையடைந்த விதத்தைக் குறித்து விளக்கமாகக் கூறினான். அவனுக்குப் பார்வை கொடுத்தவர் ஒரு பெரிய தீர்க்கதரிசி எனபதை பரிசேயர்கள் மற்றும் யூத மதத் தலைவர்கள் முன்பிலும் அறிக்கை செய்கிறான். (மத் 10:32) ஓய்வு நாளைக் குறித்த சட்டமோ, இயேசுவைக் கிறிஸ்துவென்று எவனாவது அறிக்கை செய்தால் அவனைச் சபைக்கு புறம்பே தள்ளி விடுவோம் என்ற பயமுறுத்தலோ அவனுடைய நம்பிக்கையை அசைக்க முடியவில்லை. அவனுடைய துடுக்குத்தனமான பேச்சினால் தன்னுடைய பெற்றோருக்கு ஏதேனும் துன்பம் விளையுமோ என்றும் கவலைப்பட்டானில்லை (லூக் 14:26) என்னே. அவனுடைய துணிவும், கொள்கைப் பிடிப்பும்? இன்றைக்கு கிறிஸ்தவர்களாகிய நம்மெல்லோரும் அவனைப் போலவே துணிவும் மன உறுதியும், கொள்கைப் பிடிப்பும் உள்ளவர்களாக இருந்தால் கிறிஸ்தவத்தின் நிலை மிகவும் வித்தியாசமானதாக வன்றோ இருக்கும்.?!

மூன்றாவதாக, தேவனுடைய எளிதான திட்டத்தைப் புரிந்து கொள்ள முடியாமலும், சில நேரங்களில் புரிந்துகொள்ள விருப்பம் அற்றவர்களாகவும், தங்களுடைய தலைக்கனத்தால் மனிதன் உருவாக்-

கிக்கொண்ட பல்வேறு விதமான தத்துவங்களைப் பற்றியெல்லாம் அவன் அலட்டிக் கொள்ளவில்லை. மெத்தப் படித்திருக்கிறோம் என்ற மமதையால் மண்டை வீக்கம் பெற்றிருந்த அந்த யூதத்தலைவர்கள் நியாயப்பிரமாணம் என்றும் பழைய ஏற்பாடு என்றும் எதை எதையோ சுட்டிக் காட்டி அவனைக் குழப்பி மிரட்ட முயல்கின்றனர். நியாயப்பிரமாணத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும் என்றும், முழுதும் பாவத்தில் பிறந்தவன் என்றும் பல இழி சொற்களை வீசி அவனை மடக்க முயலுகின்றனர். பெரிய மனிதர்களும், கல்விமான்களும் மதவித்தகர்களும் அவனைப் பற்றியும், அவனுடைய நம்பிக்கையைக் குறித்தும் என்ன நினைக்கிறார்கள் என்றெல்லாம் அவன் கவலைப் பட்டுக் கொள்ளவில்லை.

பல கோணங்களில் முயன்றும் அவனை மேற்கொள்ள முடியாத யூதத் தலைவர்கள் எரிச்சலடைந்து தங்கள் வசமுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி அவனைச் சபைக்குப் புறப்பாக்கி தங்கள் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டனர். 'கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப் படுவார்கள்'. என்று அன்றே பவுலார் தீமோத்தேயுக்கு எழுதுகிறார். 2 தீமோ 3:12. ஆம் சகோதரனே, இப்படி இரத்த சாட்சியாக மரித்தவர்களையும், கிறிஸ்துவினிமித்தம் பாடனுபவித்தவர்களையும் வேதாகமத்தில் பல இடங்களில் காணலாம். அப்படிப்பட்டவர்களுடைய கல்லறைகள் மீது தான் அநேக உயிரோட்டமுள்ள பலமான சபைகள் உதயமாயின என்பதை சபை வரலாறு கூறுகிறது.

அதிகாரப் பீடத்தில் அமர்ந்து கொண்டு கோலோச்சும் உன்மத்தர்கள், அறியாமை, மூடநம்பிக்கை, விக்கிரக ஆராதனை கள்ள போதகங்கள் என்னும் இருளிலே அகப்பட்டுக் கொண்டு தவிக்கிற மக்களுக்கு உதவும் நல் எண்ணத்துடன் மெய்ஞான ஒளியாகிய இயேசுவினிடத்தில் நாம் வழி நடத்த எத்தனிக்கும் பொழுது, இரும்புக் கரம் நீட்டி நமக்குத் தடை விதித்து தீங்கு விளைவித்தால் நாம் என்ன செய்யப்போகிறோம்? என்றோ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சம்பவித்த சில நிகழ்ச்சிகளையே சொல்லிச் சொல்லி பழங் கதை பேசப் போகிறோமோ? அன்றி தேவனுடைய ஆசீர்வாதம் நிரம்பிய மெய்வாழ்வுக்கு முன்பு இந்த அழிந்து போகிற உலகமும் அதன் மேன்மைகளும் குப்பையும் தூசுமாம் என்று அறைகூவி கிறிஸ்துவுக்காக எழும்பிப் போராடத் தோள் தட்டுகிற மற்றவர்களையும், வீராங்கனைகளையும் நம்முடைய சீரிய முன் உதாரணத்தின் மூலம் உருவாக்கப் போகிறோமா? என்பதே இன்றைக்கு நம் மத்தியில் விடுக்கப்பட்டிருக்கிற சவால் அன்பின் திருவுருவம், சாந்தத்தின் உறைவிடம், பரிசேயரைக் கடுமையாகச் சாடினாரே அதற்கு என்ன காரணம் தெரியுமா, என் உடன் ஊழியனே? அவர்கள் சந்தை வெளிகளில் வந்தனங்களை விரும்பியும் மனிதரால் 'ரபீ' என்றழைக்கப்படுவதற்கு ஆசைப்பட்டும், மக்களிடம்

காணப்படுகிற தேவ விரோதச் செயல்களையும் பாவங்களையும் கண்டும் காணுதவர்கள் போல் இருந்ததோடு மட்டும் அல்லாது அப்படிச் செய்கிறவர்களுக்கு முகத்தாட்சண்யம் காட்டி தேவனுல் வரும் மகிமையைக் காட்டிலும் மனிதரால் வரும் புகழ்ச்சியை விரும்பியதலை- லேயே. யோவான் 12:43 அதன் விளைவாக மாய்மாலமும், வெளிப்- பகட்டு, மேல் பூச்சு விசுவாசமும் தேவனுடைய மெய்ஞான வழி செல்வோரைக் குழப்பமுறச் செய்தன. அதனுல் தான் அவர்களைக் 'குருட்டு வழிகாட்டிகள்' என்று இடித்துரைக்கின்றூர். அருமைச் சகோதரன் யாக்கோபும் கூட என் சகோதரர்களே, நீங்கள் எல்லோரும் போதகர்களாக, விரும்பாதீர்கள். போதகர்களாகிய நாம் கண்டிப்பான தீர்ப்புக்கு உள்ளாக வேண்டியிருக்கும் என்பது தெரியு- மன்றோ?' (திருத்திய மொழி பெயர்ப்பு) என்று எச்சரிக்கிறூர். ஆகவே நாம் நம்மீது சுமத்தப்பட்டுள்ள பெரும் பொறுப்பினை உணர்ந்தவர்- களாக கிறிஸ்தவ வாழ்க்கை நெறிகள் அனைத்தையும் தெளிவாகவும், பூரணமாகவும் போதித்து, புரிந்துகொண்டு விருப்பம் தெரிவிக்கிறவர்- களை மாத்திரம் அவர்களுடைய தொண்டர்களாக்குவோம். ஒருவேளை இது கடினமான வழி கர்த்தருடைய பணி இதனுல் தாமதமாகும் என்று எண்ணி மலைக்க வேண்டாம். கர்த்தர் அப்படிப்பட்ட வழியைத் தான் நிச்சயம் அங்கீகரிப்பார். இடுக்கமான வழியில் செல்பவர் சிலர் தான் என்பதை அன்றே சொன்னதை நினைவுகூர். பன்றி யானையை விட குறைவான காலத்தில் நிறைய குட்டிகளை ஈண முடியும். ஆனுல் பன்றிக் குட்டிகளுக்கும் யானைக் குட்டிக்கும் பயனிலும் மதிப்பிலும் மாபெரும் வேறுபாடு இருக்கிறது என்பதை மறவாதே.

E. Z செல்வநாயகம்

## இயேசுவின் அருள் மொழிகளில் சில

தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம். ஒருவன் உனது வலது கன்னத்தில் அறைந்தால் அவனுககு மறுகன்னத்தை- யும் திருப்பிக் கொடு.

உன்னேடு வழக்காடி உன் ஆடைகளை உறிந்துகொள்ள வேண்டும் என்று நினைப்பவனுக்கு உன் அங்கிகளையும் கொடுத்து விடு.

ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டால் அவனேடு இரண்டு மைல் தூரம் போ.

உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்.

உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்.

உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.

இறைவன் தீயோர் மேலும், நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப் பண்ணி நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ள- வர்கள் மேலும் மழையை பெய்யப் பண்ணுகிறூர்.

இறைமக்கள் அனைவரும் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி மேற்கூறிய அருளுரையின்படி நடவுங்கள்.

மத் 5:39-45.

# விசுவாசப் போராட்டம்!

போராட்டம் அல்லது யுத்தம் என்றால் குறிப்பிட்ட நோக்கத்துக்காக இடுகிற சண்டை என்று கூறலாம். உலகில் பல போராட்டங்களைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். அவைகளெல்லாம் இவ்வுலக வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவைகள். நாம் இங்கே கவனிக்கப் போவது ஆன்மாவுக்கடுத்த போராட்டம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ள விசுவாசிகள் போராட வேண்டிய போராட்டம்.

**இப்போராட்டம் பிசாசுக்கு எதிரானது.**

ஏனெனில் ஆன்மாவைப்பற்றிச் சிந்திக்கிறவர்களையே சத்துருவாகிய சாத்தான் தனது முதல் எதிரியாகக் கருதுகிறான். ஆன்மாவைப் பற்றி சிந்திக்கிறவனுக்கு இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமை தெரியும். பிசாசு மக்களை எவ்வாறு தன் மாய வலையில் விழ வைத்து அவர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறான் என்கிற அபாய நிலைமை தெரியும் கெர்ச்சிக்கிற சிங்கம்போல மக்களை விழுங்குவதற்கு அவன் சுற்றித் திரிகிறதைக் கண்டு தன்னையும் காத்துக்கொண்டு, மற்றவர்களையும் விழிப்புடன் இருக்கும்படி எச்சரிக்கிறான். 1 பேதுரு 5:8; அவனுக்குக் கொஞ்சமும் இடங்கொடுக்காது (எபே 4:27) அவனுக்கு எதிர்த்து நிற்க வேண்டும் என்று தைரியமாக அறைகூவல் விடுவதினால் அவனுக்கு மிகுந்த எரிச்சல். அதனால்தான் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாயிருக்க விரும்புகிற யாவரையும் துன்பப்படுத்துகிறான். 2 தீமோ 3:12

**இப்போராட்டம் மாமிசத்துக்கு எதிரானது.**

கிறிஸ்தவர் ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்களாக இருக்கவேண்டும். கொலே 3 : 2 மாமிசமும், இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. என்று 1 கொரி 15:50ல் வாசிக்கிறோம். ஆவியும் மாமிசமும் ஒன்று மற்றொன்றுக்கு எதிராகபோராடுகிறது. கலா 5:17; இந்த நோய் அப்போஸ்தலனாகிய பவுலையும் கூடவிட்டு வைக்கவில்லை, ரோமர் 7:23; ஆகவே ஆத்துமாவுக்கு விரோதமாய் போர் செய்கிற மாமிச இச்சைகளை விட்டு விலக வேண்டும். என்று பேதுரு கூறுகிறார். 1 பேது 2:11. மாமிசத்தோடு போராட வேண்டும். யாக் 4:4. ஆனால் அநேகர் இன்று மாமிசத்துக்காகப் போராடுகிறோம்.

**இப்போராட்டம் உலகத்துக்கு எதிரானது.**

உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்றும் அப்படிப்பட்டவன் தேவனுக்கு விரோதி என்றும் யாக்கோபு கூறுகிறார் யாக் 4:4. உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூறுகிறார்கள். அப்படிப்பட்டவர்களிடத்தில் தேவ அன்பு இருக்க முடியாது

என்றும் யோவான் கூறுகிறார் 1 யோவா 2:15; உலகத்தில் உபத்திரவம் உண்டு என்றும், போராடி ஜெயித்தேன் என்றும், எங்கள் கிறிஸ்து சொல்லுகிறார். யோ. 16:33.

## இப்போராட்டம் சொந்த வீட்டாருக்கு எதிரானது.

சிநேகிதனை விசுவாசிக்க வேண்டாம். வழிகாட்டியை நம்ப வேண்டாம் மனைவிக்கு முன்வாய் திறக்க வேண்டாம் என்றும், மகன் தகப்பனைக் கனவீனப்படுத்துகிறான். மகள் தாய்க்கு விரோதமாகவும், மருமகள் மாமிக்கு விரோதமாகவும் எழும்புகிறார்கள் என்றும் ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே என்றும் மீகா தீர்க்கதரி எச்சரித்திருக்கிறார். மீகா 7:5,6 இதை கிறிஸ்துவும் உறுதிப்படுத்து-கிறார். மத் 10:36. இது முதல் ஒரே வீட்டில் உள்ள ஐந்து பேர் இரண்டு பேருக்கு விரோதமாய் மூன்று பேரும், மூன்று பேருக்கு விரோதமாக இரண்டு பேரும் பிரிந்திருப்பார்கள். மகன் தகப்பனுக்கு விரோதமாகவும் தகப்பன் மகனுக்கு விரோதமாக......லூக் 12:50-52 என்று பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. ஆகவே ஒரு நல்ல கிறிஸ்தவன் வீட்டாரோடும் கூட போராட வேண்டிவரலாம். அது மாத்திரமன்று; துரைத்தனங்களோடும். அதிகாரங்களோடும். வான மண்டலத்தின் பொல்லாத ஆவியின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு எபேசியர் 6:12.

## இந்தப் போராட்டத்தில் உபயோகிக்கப்பட வேண்டிய போர்க் கருவிகள்!

நம்முடைய போராயுதங்கள், உலகியல் போராட்டக்காரர்கள் உபயோகிப்பதைப் போன்ற துப்பாக்கி, வெடிகுண்டு, மற்றும் தற் காலத்தில் விஞ்ஞானிகளால் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு அழிவுச் சக்திகள் அல்ல. உலகியல் கோட்பாட்டுக்காரர்களின் தர்க்கங்களையும் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகின்ற எல்லா மேட்டி-மைகளையும் நிர்மூலமாக்கி எந்த எண்ணத்தையும், கிறிஸ்துவுக்கு கீழ்ப்-படியச் செய்கிற தேவ பெலன்களும் (2 கொரி 12:45) தேவனுடைய சர்வாயுத வர்க்கங்களாகிய

சத்தியம் என்னும் இடைக்கச்சை
நீதி என்னும் மார்க்கவசம்
சுவிசேஷத்தின் ஆயத்தம் என்னும் பாதரட்சை
விசுவாசம் என்னும் கேடயம்
இரட்சண்யம் என்னும் தலைச்சீரா
ஆவியின் பட்டயம். எபே 4:14-17 ஆகியவைகளே.

மேற்கூறிய போராயுதங்களை முறையாக உபயோகித்து, நமது போராட்டத்தை நடத்தும்போது தேவன் நமக்காகப் போர் செய்து, வெற்றியை ஈட்டித் தருவார். யாத் 14:14. இந்த விசுவாசப் போராட்டத்தை தேவ ஆலோசனைப்படி செய்பவர்களுக்கு உபத்திரவம்-

கள் உண்டு. 2 தீமோ 3 : 12, வெளி 2 : 10, ஆயினும் அப்பாடுகளை சகிப்புத் தன்மையோடும் (2 தீமோ 2 : 10) தைரியமாகவும் (யூதா 3) ஜெபத்தோடும் மிகுந்த மன உறுதியோடும் (எபே 6 : 18) உலகியலின் மாயையில் பற்றற்றவர்களாகவும் (2 தீமோ 2:4) விசுவாசத்தோடும். நல் மனச் சாட்சியோடும் (1 தீமோ 1:18) போராட வேண்டும் அதற்கு ஈடாக தேவன் "அளிப்பேன்" என்று வாக்குக் கொடுத்திருக்கிற பரிசுகளின் விலை மதிப்பும், அதன் தன்மையும், நாம் படுகிற பாடுகளோடு ஒப்பிடப்படும் பொழுது மிக மிக உயர்ந்தவைகள் இதோ அந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் சில :-

1. வாடாத, அழிவில்லாத, ஜீவனுள்ள நீதியின் கிரீடம் 1 பேதுரு 5:4; யாக் 1:12, 1 கொரி 9:25, 2 தீமோ 4:8.
2. ஆதாம் ஏவாளின் மீறுதல் காரணமாக மனுக்குலத்துக்கு மறுக்கப்பட்டிருந்த ஜீவ விருட்சத்தின் கனி வெளி 2;7.
3. புத்திர சுவிகாரம் வெளி 2;7.
4. வெண் வஸ்திரம் வெளி 3:5
5. மறைவான மன்னா வெண்மையான குறிக்கல், புதிய நாமம் வெளி 2:17.
6. இரண்டாம் மரணத்திலிருந்து விடுதலை வெளி 2:11
7. கிறிஸ்துவுடனே கூட ஆளுகை செய்யும் வாய்ப்பு. வெளி 3:21.

இன்னும் எண்ணிலடங்கா எத்தனையோ பரிசுகள்! இதை வாசிக்கும் எனது அருமை நண்பனே! நம்முடைய போராட்டம் எதைப் பற்றியது? அழிந்து ஒழிந்து போகிற மாமிசப் போராட்டமா? அன்றி என்றென்றும் விண்ணரசரோடு வீற்றிருக்கும் ஆன்மீகப் போராட்டமா? சிந்தியுங்கள்; செயல்படுங்கள். காலம் சமீபித்து விட்டது.

ஹென்றிமோகன்

## தர்மம் செய்வதில்

| சரியான முறை | தவறான முறை |
|---|---|
| உன் வலது கை செய்கிற தர்மம் இடது கைக்குத் தெரியாமல் இருக்கட்டும். | மனிதரால் புகழப்படுவதற்கு மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வது போல உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே. |

# பழைய ஏற்பாடும் கிறிஸ்தவர்களும்

கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்ளுகிற மக்களில் பெரும்பாலோர் பழைய ஏற்பாட்டுக்கும், புதிய ஏற்பாட்டுக்கும் உள்ள வித்தியாசங்களைப் புரிந்து கொள்ளாமல், பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் தங்கள் சௌகரியத்துக்கு ஏற்றவாறு பயன் படுத்தி மக்களைக் குழப்பி, குழம்பின குட்டையில் மீன் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உதாரணமாக கர்த்தருக்குக் கொடுக்கிற விஷயத்தை எடுத்துக் கொள்வோம். புதிய ஏற்பாடு 'அவனவன் விசனமாயுமல்ல; கட்டாயமாயுமல்ல தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன். உற்சாக-மாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்' என்று தெளிவாகப் போதிக்கிறது. 2 கொரி 9:7. இந்தத் தன் ஆர்வ முறையை ஊக்குவிப்பது சற்றுக் கடினம் என்று நினைத்து, பழைய ஏற்பாட்டுக் கட்டாய முறையாகிய தசமபாகத்தை வலியுறுத்துவார்கள். ஆபரணங்கள் அணியும் விஷயத்திலும், ஆராதனை முறையிலும் புதிய ஏற்பாட்டு உபதேசம் என்று கூறிக்கொண்டு பொன் ஆபரணங்களை அணியக்கூடாது என்பர். சனிக்கிழமை (ஓய்வு நாள்) ஆராதனை என்பது யூதருக்குத் தான் கிறிஸ்தவர்களுக்கு ஞாயிறு தான் ஆராதனை நாள் என்பர்.

அதே போன்று விருத்தசேதனம், பலி செலுத்துதல் என்று வரும் போது புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி அவைகள் அவசியமற்றது என்பார்கள். ஆனால் வாத்தியக் கருவிகளை உபயோகத்திலும், சபையில் பெண்கள் பேசக்கூடாது என்கிற விஷயத்திலும் உங்கள் கொள்கை என்ன என்று கேட்டால் தாவீதைப்பார், மீரியாமைப் பார் என்பார்கள். அப்படியானால் பழைய ஏற்பாட்டு மனிதர்களாகிய ஆபிரகாம், தாவீது போன்றவர்கள் பல மனைவிகளையும், மறுமனையாட்டிகளையும் உடையவர்களாக இருந்தார்களே அதைப் பின்பற்றி நாமும் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் செய்து கொள்ளலாமா? என்று கேட்டால் அது எப்படி என்று மழுப்புவார்கள்.

I. இத்தகைய குழப்பவாதிகள் இன்று நேற்றுத் தோன்றியவர்கள் அல்ல. முதல் நூற்றாண்டிலேயே இருந்திருக்கிறார்கள் அவர்கள் யூத மார்க்கக் கோட்பாடுகளை எப்படியாவது கிறிஸ்தவத்துக்குள் திணித்துவிட வேண்டும் என்று எவ்வளவோ தந்திரமாக பிரயாசப்பட்டார்கள் ஆனால் பரிசுத்த ஆவியானவர் விழிப்-புடன் இருந்து கர்த்தருடைய பிள்ளைகளைக் கொண்டு அவற்றை யெல்லாம் முறியடித்தார் தயவு செய்து கலா 5:1-4; அப் 15:1-29; கலா 2:1-5 ஆகிய வசனப்பகுதிகளை வாசித்துப் பாருங்கள்.

ஆனால் சத்துருவாகிய சாத்தானுக்கு தோல்விகளைப் பற்றி வெட்கமும் கிடையாது; தன்னுடைய முயற்சியை கைவிடுவதும் கிடையாது. அவனுடைய வாரிசுகளை ஏவி தற்காலத்திலும் தொடர்ந்து பலவிதமான சூழ்நிலைக்கும் காலத்துக்கும் ஏற்றவாறு குழப்பமான போதனைகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறான். ஆகவேதான் பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுக்கு எழுதும்போது மந்தைகளை, இப்படிப்பட்ட ஓநாய்களைக் குறித்து உஷார்படுத்தவும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கவும் அறிவுரை கூறுகிறார். 2 தீமோ 2:14, 15.

கீழ்வரும் வேதாகம உண்மைகளை ஆய்ந்து பார்த்து, கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டுச் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டவர்கள் அல்ல என்பதை அறிந்து கொள்வோம்.

**1. பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்கள் யூதர்கள் என்று அழைக்கப்படும் ஒரு குறிப்பிட்ட இனத்தாருக்குக் கொடுக்கப்பட்டது. அது மற்ற எவருக்கும் பொருந்தாது**

பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் ஒன்றாக இணைக்கப்பட்டு பரிசுத்த வேதாகமம் என்று அழைக்கப்பட்ட போதிலும், அதில்உள்ள சத்தியங்களில், வெளிப்பாடுகளில் காலத்துக்கேற்ப வித்தியாசங்கள் உண்டு என்பதை மனதில் கொள்ளவேண்டும். பரிசுத்த வேதாகமத்தைப் படிக்கும் போது, யார் பேசுகிறது யாரிடத்தில் பேசப்படுகிறது, எப்பொழுது பேசப்பட்டது என்பன போன்ற வினாக்களை எழுப்பினால் தெளிவு கிடைக்கும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இந்த வார்த்தைகளை எழுது இந்த வார்த்தைகளின்படியே உன்னோடும் **இஸ்ரவேலரோடும்** உடன்படிக்கை பண்ணினேன்". என்றார் யாத் 34 ; 27 "**இஸ்ரவேல் மக்கள்** தலைமுறை தோறும் ஓய்வுநாளை நித்திய உடன்படிக்கையாக கைக்கொள்ளக் கடவர்கள். அது என்றைக்கும் **எனக்கும்** (தேவனுக்கும்) **இஸ்ரவேல் புத்திரருக்கும்** அடையாளமாயிருக்கும்" என்றார் யாத் 31:16, 17 மேலும் உபாகமம் 5: 1-3 வசனங்களில்" அந்த உடன்படிக்கையை கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல் இந்நாளில் **இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும்** பண்ணினார் "(வ. 2)" நீர் சீனாய் மலையில் இறங்கி வானத்திலிருந்து அவர்களோடே பேசி அவர்களுக்குச் செம்மையான நீதி நியாயங்களையும், நல்ல கட்டளைகளும், கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் கொடுத்தீர் .......... உமது தாசனாகிய மோசேயைக் கொண்டு அவர்களுக்கு கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயப்பிரமாணங்களையும் கற்பித்தீர் நெகே. 9:13-14 இங்கே **அவர்கள்** என்னும் பெயருரிச்சொல் **இஸ்ரவேலரைச்** சுட்டுகிறது (வ. 9) மேற்கூறப்பட்டுள்ள வசனங்களின் வழியாய் நாம் தெரிந்து கொள்வது என்ன? பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்கள் இஸ்ரவேலர் என்று அழைக்கப்படும்

யாக்கோபின் சந்ததியாருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகள். அதை அவர்கள் (இஸ்ரவேலர்) என்றென்றைக்கும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதானே.

**2. பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத் தான். ஏற்ற வேளை வரும்போது அது முற்றுப்பெறும்.**

சுமார் கி. மு. 650 ஆண்டு வாக்கில் பழைய ஏற்பாட்டுத் தீர்க்க தரிசிகளில் முக்கியமான எரேமியா தீர்க்கன் மூலமாக தேவன் உரைத்தது இதோ நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தாரோடும் யூதா குடும்பத்தாரோடும் **புது உடன்படிக்கை பண்ணுவேன்.** நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வரக் கை பிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல ஏனெனில் நான் அவர்கள் நாயகராயிருந்தும் அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அந்த நாட்களுக்குப் பிறகு நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப் போகிற உடன்படிக்கையாவது நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' எரே 31:31-34.

இவ்வாறு எரேமியா தீர்க்கதரிசி முன்னுரைத்தது நிறைவேறினதை கிறிஸ்து பிறந்த பிறகு சுமார் எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப் பட்ட புதிய ஏற்பாட்டில் உள்ள எபிரேயர் நிருபத்தில் வாசிக்கிறோம். எபி 8:6-13 மேலே படிப்பதற்கு முன் மேலே தரப்பட்டுள்ள வசனப் பகுதியை மேலும் ஒருமுறை வாசித்துச் சிந்தித்துப் பார்க்க வேண்டு கிறேன். தேவன் மோசே மூலமாகக் கொடுத்த உடன்படிக்கையைக் காட்டிலும் **வித்தியாசமான புதிய உடன்படிக்கையைத் தருவேன்** என்று கூறினார். அது நிறைவேறினது என்று எபிரேயர் நிருப ஆசிரியர் குறிப்பிடுகிறார் ''பழமையானதும் நாள் பட்டதுமாயிருக்கிறதும் அழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது'' (வ. 13) என்கிறார் மேலும் அதே நிருபம் 7:12ல் ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால் நியாயப் பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகும் என்கிறார். (ஆசாரியத்-துவம் லேவி கோத்திரத்திலிருந்து மாற்றப்பட்டு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி இன்று இயேசுகிறிஸ்து பிரதான ஆசாரியராக இருக்கிறார். (எபி 3:1;4:14;5:5) இயேசு கிறிஸ்து மாம்சத்தின்படி யூதா கோத்திரத்தைக் சேர்ந்தவர். (மத் 1 : 1-17 ; லூக் 3 ; 23 - 28 காண்க).

3. கிறிஸ்தவர்களை வழி நடத்தும் சட்டமாக பழைய ஏற்பாடு இராதபடி அதைக் கிறிஸ்துவின் சிலுவையின்மேல் ஆணி அடித்து முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

கிறிஸ்தவர்கள் இயேசுவின் சரீரத்தினால் நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்கள் என்கிறார் பவுல் ரோமர் 7:4 எந்த நியாயப்பிரமாணம்? "இச்சியாதிருப்பாயாக" என்கிற பிரமாணத்தை உள்ளடக்கிய நியாயப் பிரமாணம், அது பத்துக் கற்பனைகளில் ஒன்று. 2 கொரி 3:14ல் "இந்நாள் வரைக்கும் பழைய ஏற்பாடு வாசிக்கப்படுகையில் அந்த முக்காடு நீங்காமல் இருக்கிறது அது கிறிஸ்துவினாலே நீக்கப்படுகிறது. என்று சொல்லப்பட்டிருக்கிறது" எபே 2 : 15-ல் சட்ட திட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தை தம்முடைய மாமிசத்தினாலே ஒழித்து விட்டார் என்றுபார்க்கிறோம். அதனால் பழைய ஏற்பாடு இன்றைக்கு கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் அகற்றப்பட்டிருக்கிறபடியால் கிறிஸ்தவர்கள் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்களாயிருக்கும் தகுதியை இழந்துவிட்டது. ஆகவே கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டின் சட்டதிட்டங்களால் ஆளப்படுவதில்லை என்னும் உண்மையை அறிக.

II. பழைய ஏற்பாடு இன்றைக்கு தேவனுடைய சித்தத்தை யறிந்து பின்பற்றுவதற்குரிய பிரமாணங்களாக இராவிட்டாலும் கிறிஸ்தவர்கள் தேவனை அறிந்து கொள்வதற்கும், வரலாறுகளை அறிந்து கொள்வதற்கும் பெருமளவு உதவுகின்றன.

கீழ்வரும் இரண்டு வசனங்கள் அவைகளை நமக்கு உணர்த்துகின்றன. "தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கை உள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகள் எல்லாம் நமக்குப் போதனையாக எழுதப்பட்டிருக்கிறது. என்றும் (ரோமர் 15 : 4) "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்பு உண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" என்றும் (1 கொரி 10:11) வாசிக்கிறோம்.

1. உதாரணமாக (அ) உலகத்தோற்றம் ஆதி 1-1; சங் 33 : 6, 9; மனிதனுடைய தோற்றுவாய் மற்றும் அவனது இயல்புகள் ஆதி 2:7; சகரியா 12 .1; மனித சமுதாயத்தைப் பாழ்படுத்தும் பாவம் நுழைந்த சூாதை ஆதி 3-1-6; (ஆ) ஆபிரகாம் முதல் பழைய ஏற்பாடு முடியும் வரை நடந்த சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகள் பற்றியும், புதிய ஏற்பாட்டைப் படித்துப் புரிந்து கொள்வதற்குத் தேவையான குறிப்புகள், அதாவது புதிய ஏற்பாட்டில் சொல்லப்படும் பஸ்கா, பெந்தேகோஸ்தே போன்ற யூதர்களுடைய பண்டிகைகளைப்பற்றியும், ஓய்வுநாள் இரத்தம் சிந்துதல், பிரயாசித்தம் என்கிற சொற்களின் விளக்கத்தைப் பற்றியும், யூதருடைய கலாச்சாரம், நடையுடை பாவனைகளைப்

பற்றியும் எலியா, மோசே, ஆதாம் ஏவாள் போன்ற பழைய ஏற்பாட்டின் முக்கியமான நபர்களைப் பற்றியும், அவர்கள் தேவனோடு கொண்டிருந்த தொடர்பு, அவைகளால் ஏற்பட்ட நன்மை தீமைகள் போன்றவற்றைப் பற்றியும், எருசலேம் பட்டணம் யோர்தான்நதி, சமாரியாநாடு என்பவைகள் என்ன எங்கே இருக்கின்றன என்கிற பூகோள உண்மைகளைப் பற்றியும், அறிந்து கொள்வதற்கு பழைய ஏற்பாடு இல்லாமல் முடியாது. (இ) இயேசுகிறிஸ்துவின் மூதாதையருடைய வம்சாவழி(மத் 1 லூக் 3)அவரைப்பற்றி முன் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் (சங் 16:8,10; ஏசாயா 53) எவ்வாறு ஆட்டுக்கடா, காளை ஆகியவைகளின் இரத்தம் மனுக்குலத்தின் பாவத்தைக் கழுவிச் சுத்திகரிக்க முடியாது (எபி 10:1,2) என்பதையும் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய விஷயங்களாகிய பாவம், நீதி, பரிசுத்தம் ஜெபம் ஆகியவைகளின் கருத்து என்ன என்பதைப் பற்றியும் பழைய ஏற்பாட்டின் துணையின்றி அறிந்து கொள்ளமுடியாது.

**2. பழைய ஏற்பாட்டில் மனுக்குலத்தை எச்சரித்து அறிவுரை கூறும் ஏராளமான வசனப்பகுதிகள் இருக்கின்றன.**

அவைகளில் சில (அ) மனிதனுடைய கட்டுத் திட்டங்களுக்கு அடங்காமல் சதா போர்க்கொடி உயர்த்திக் கொண்டிருக்கும் மனதைக் கட்டுப்படுத்துவதைப் பற்றி, நீதி 4 : 23, கோபத்தினால் விளையும் அபாயத்தைப் பற்றியும், பொருளாசையின் தீமைகளைப் பற்றியும் யாத் 20:17, யோசுவா 7-ம் அதிகாரம், சாவுக் கேதுவான பாவங்களைப் பற்றியும் [நீதி 6:16-19]

[ஆ] தேவனுக்குக் கீழ்ப்படியும் அவசியத்தை உணர்த்தும் வகையிலும் [எபி 11-ம் அதிகாரத்திலுள்ள விசுவாசிகளின் பட்டியலில் உள்ள சான்றோர்களாகிய யோசுவா. நோவா யோசேப்பு போன்றவர்களின் வாழ்க்கைகளை பழைய ஏற்பாடுதான் நமக்குத் தெரிவிக்கிறது)

[இ] கீழ்ப்படியாதவர்களுக்கும், அக்கிரமங்களுக்கும் அளிக்கப்பட்ட தண்டனைகளைப்பற்றியும் [தாவீது செய்த பாவம் 2 சாமு 11, சங் 51[ சவுலின் கீழ்ப்படியாமையால் வந்த தேவ கோபம் (1 சாமு 15ம் அதிகாரம்) கர்த்தருடைய நியமங்களை அற்பமாய் எண்ணி, தங்கள் விருப்பம்போல் செய்த நாதாப் அபியூ ஆகியோருக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனை (லேவி 10-ம் அதிகாரம்) பிலேயாமின் பண ஆசை ஊழியம் (எண், 22) ஆகியவைகள் தற்காலத்து தேவனுடைய பிள்ளைகளுக்கு எச்சரிப்பாக எழுதப்பட்டுள்ளது.

**3. பழைய ஏற்பாடு நமக்குப் பொறுமையாயிருக்கவும், ஆறுதல் அடையவும் தக்கதான வசனங்களைத் தருகிறது.**

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குத் தரும் பாதுகாப்பு. ஆறுதல்

பற்றிக் கீழ்க்காணும் சங்கீதங்கள் கூறுகின்றன. சங் 23, 27, 103, 121 அது மாத்தரமல்ல, தம்முடைய தாசர்களை எவ்விதம் அரவணைத்துக் காத்து ஆசீர்வதிக்கிறார். என்பதையும் சொல்லுகிறது. யோபு புத்தகம், தாவீதின் சங் 37 : 25.26; யோசுவா 1 : 5-9. இஸ்ரவேல் மக்கள் பல சந்தர்ப்பங்களில் அவருக்குத் துரோகம் செய்து திசைமாறிச் சென்ற போதிலும் அவர்கள் மனம் திரும்பி அவரை நோக்கி மன்றாடின பொழுது, அவர்களுடைய துரோகச் செயல்களை மறந்து, மன்னித்து அவர்களுடைய துயர்களை நீக்கி, கண்ணீரைத் துடைத்து, ஆறுதல் கூறி அவர்களுக்குச் செய்த நன்மைகளை, அளித்த பாதுகாப்புகள் நமக்கு உற்சாக மூட்டி, அவர்மீது முழு நம்பிக்கை வைக்கும்படி செய்கிறது.

இப்படிப் பல காரியங்களை நமக்கு அறிவித்து உதவியபோதிலும் பழைய ஏற்பாடு கிறிஸ்தவர்கள் பின்பற்றுவதற்குரிய சட்டநூலாக இருப்பதற்கான தகுதியை இழந்து நிற்கிறது. ஏனெனில் அது எந்த நோக்கத்துக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்த நோக்கம் முற்றுப் பெற்றுவிட்டது கலா 3:19, 24, 25 அதைக் கிறிஸ்து தனது சிலுவை மரணத்தின் வழியாய் முடிவடையச் செய்துவிட்டார், எபே 2;15.

இப்படிச் சொல்லுவதினால் யாரும் நாம் பழைய ஏற்பாட்டை வேண்டாம் என்று சொல்லுகிறோம் என்று பொருள் கொள்ளக் கூடாது. பழைய எற்பாடும் தேவ ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்று மதித்துப் போற்றிப் பாதுகாக்கவேண்டும் என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டாம். ஏனெனில் அதில் நாம் கற்றுக் கொள்வதற்கும், எச்சரிப் படைவதற்கும், பொறுமையாய் இருப்பதற்கும் ஆறுதல் அடைவதற்கும் உரிய ஏராளமான விஷயங்கள் உள்ளன. 2 தீமோ 3:16 17 கூறுகிற வேத வசனங்கள் என்பது பழைய ஏற்பாட்டையும் உள்ளடக்கித் தான் கூறுகிறது என்பதை மறவாதீர். ஆயினும் அவைகள் நமக்குப் போதனை களும், திருஷ்டாந்தங்களுமே, பின்பற்றுவதற்குரியதல்ல.

S. S. ராஜன்

வில்லியம் வுட்ஸன்

## ஊழிய அழைப்பு

'யாரை நான் அனுப்புவது? யார் நம்முடைய காரியமாகப் போவார்கள்? என்ற் தேவனுடைய அங்கலாய்ப்புக் கேள்வி பொதுவானது. ஏசாயா இச் சத்தத்தைக் கேட்டு ஆத்தும பாரமுடையவராய் 'இதோ இருக்கிறேன் அடியேனை அனுப்பும்' என்று பதிலளித்தார்.

தேவன் யாரையும் பலவந்தப்படுத்தி. தம்முடைய ஊழியத் துக்கு வரும்படி நள்ளிரவில் வந்து கதவைத் தட்டுவதில்லை. தேவனுடைய ஊழியத்துக்கு ஆட்கள் தேவை என்பது மெய்யே மத் 9:37. ஆனால் நிர்ப்பந்தம் இல்லை. ஆண்டவருடைய அழைப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு. ஏற்றுக்கொள்வதும், அசட்டை செய்வதும் உன் விருப்பம், உன் சுதந்திரத்தில் அவர் தலையிடுவது இல்லை.

# செத்த ஈக்கள்

'செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமள தைலத்தை நாறிக் கெட்டுப்போகப் பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்.'

எனக்கு ஓர் அம்மாவைத் தெரியும். அவர்கள் மிகவும் திறமையுள்ளவர்கள். நான் அவர்களைச் சந்திக்கச் செல்லும் போது மிகவும் அன்பாகப் பேசுவார்கள். நன்றாக உபசரிப்பார்கள். நல்ல ஜெப வாழ்வு உடையவர்கள். சபைக் காரியங்களில் முன் நின்று ஒத்துழைப்பார்கள். ஆனால் சபையிலுள்ள ஏனையோர் அந்த அம்மாவை மிகவும் நல்லவர் என்று கூறுவதில்லை. காரணம் கோள் சொல்லிப் புறங்கூறுவதில் இவர்கள் கை தேர்ந்தவர்களாம். யாரும் நம்பிக்கையுடன் ஒரு காரியத்தை இவர்களிடம் கூற முடியாதாம். கடைசியில் நானே இந்த சங்கடத்தை அனுபவிக்க நேர்ந்தது. அதற்குப் பின் அந்த அம்மா என்றால் நான் மிகவும் எச்சரிக்கையாயிருப்பேன். இவர்களை நினைக்கும் போதெல்லாம் எனக்குப் பிரசங்கி 10:1 தான் நினைவுக்கு வரும். ஒரு வேளை பெரிய பாவமாயிருந்தால் விட்டுவிடலாம். ஆனால் இந்தச் சொற்ப மதியீனத்தை-ஒரு செத்த ஈயை-விலக்குவது சிலருக்கு வாழ்க்கையிலே கடினமாகப் போய்விடுகிறது. நாம் பெற்றிருக்கும் பெரிய தாலந்துகளை நஷ்டமாக்குவதற்கு ஒரு செத்த ஈ போதுமானது. வாழ்க்கையில் ஒரு சிறு காரியங்களிலும் நாம் அதிக விழிப்புள்ளவர்களாய் இருக்க இந்த வசனம் அறிவுறுத்துகிறது.

**முதலாவது தைலக் குப்பியை மூடிப் பாதுகாப்பதில் நாம் அதிக விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும்.** திறப்பு எங்கே இருக்கிறது. என்று சாத்தான் தேடி நடக்கிறான். கிறிஸ்தவ வாழ்க்கை சுயாதீனமானது என்று நினைத்து நிர்விசாரமாய் வாழ்வது அபாயகரமானது. நம்மிடத்தில் அதிகம் கொடுக்கப்பட்டால் அதிகம் கேட்கப்படும் என்று ஆண்டவர் கூறினார் (லூக். 12:48.) எனவே சுயாதீனம் மிகவும் பொறுப்பான வாழ்க்கைக்கு நம்மை நடத்த வேண்டும். 'உன்னைக் குறித்தும் உன் போதனையைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு' என்று தீமோத்தேயுவுக்குப் பவுல் புத்தி சொல்லுகிறார் (1 தீமோ. 4:16)). இந்த புத்திமதி எல்லாருக்கும் உரியதாகும். எல்லாக் காவலோடும் நம் இதயத்தைக் காத்துக் கொள்ளும் போது நச்சுச் சிந்தனைகளான செத்த ஈக்களுக்கு நம் சிந்தனைகள் தப்பித்துக் கொள்ளும். நமது உடல் ஓர் இயந்திரம் போன்றது. அதன் ஒவ்வொரு உறுப்பும் வேகமாக இயங்கக் கூடியது அவைகளின் செயற்பாடு நமது கட்டுப் பாட்டுக்குள் இருக்கும்போது நமது உடலைப் பரிசுத்த ஆவியின் ஆலயமாகப் பாதுகாத்துக் கொள்ளலாம். குறிப்பாக, நாவு நமது உடலில் ஒரு சிறு அவயவமாக இருந்தும் அது நமது முழு உடலையும் கறைப்

படுத்தி வாழ்க்கைச் சக்கரத்தையே கொளுத்தி நாசமாக்கும் தன்மையுள்ளது (யாக். 3:5, 6). ஒரே ஒரு தகாத வார்த்தையினால எத்தனையோ சண்டைகள்! பிரிவினைகள்! நாம் நமது தைலக் குப்பியாகிய உடல், உள்ளம், ஆவி அனைத்தையும் அதிக விழிப்புடன் காத்துக்கொள்வோமாக. விழிப்புணர்ச்சி இல்லாத பேதுரு கெத்சமேனேயில் பதில் சொல்ல முடியாமல் தள்ளாடுவதும், திடீர் வேகத்தில் பட்டயம் எடுப்பதும் நமக்கு வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

இரண்டாவது பரிமள தைலத்தின் உயர்வையும் விலையையும் உணர்ந்து நாம் விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும்: பரிமள தைலம் என்பது பலவிதமான வாசனைத் திரவியங்கள் கலந்த ஒன்றாகும். கூட்டங்களில் பிறர் முகர்ந்து மகிழ்ச்சியடையும்படி சிறப்பு நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் இது பயன்படுத்தப்படும். உன்னதப் பாட்டில் வரும் காதல் வருணனைகளில் பரிமளத் தைலம் இடம்பெறுகிறது. மகிழ்ச்சி, பாசம் இவைகளுக்கு அது அடையாளமாயிருக்கிறது. 'உமது பரிமள தைலங்கள் இன்பமான வாசனையுள்ளவைகள்; உமது நாமம் ஊற்றுண்ட பரிமள தைலம்போலிருக்கிறது; ஆகையால் கன்னியர்கள் உம்மை நேசிக்கிறார்கள்' (உன் 1:3). நாம் தெரிந்துகொண்ட வேதப் பகுதியில் ஞானம், செல்வாக்கு ஆகியவைகளைப் பரிமள தைலத்திற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார் பிரசங்கி. நமக்குக் கிடைக்கின்ற அறிவு, செல்வம், செல்வாக்கு, பட்டம், பதவி அனைத்தும் உயரிய நோக்கங்களுடன் கடவுள் தரும் அருட்கொடைகளாகும். எனவே அந்தந்த நோக்கம் நிறைவேறும்படி அவைகளை மதிப்புடன் காத்துக்கொள்ள வேண்டும். பெரிய மாடி வீடு ஒன்றைக் கட்டிவைத்துவிட்டு, குப்பை கூளங்களை முன் வாசற்படியில் கொட்டி வைத்தால் அது அந்த வீட்டின் அழகையும், மதிப்பையும் கெடுத்து விடும். அதனால் அந்த வீட்டுக்காரன் ஏளனம் பண்ணப்படுவான். நாம் இகழப்படும்போது கடவுளும் இகழப்படுகிறார். கிறிஸ்தவன் என்கிற பெயரைத் தரித்துக் கொண்டு தகாத செயல்களில் ஈடுபட்டால் நாம் கிறிஸ்துவை இன்னும் சிலுவையில் அறைகிறோம். என்பதுதானே பொருள்.

மூன்றாவது. நம்மைச் சுற்றிப் பறந்துவரும் ஈக்களைப் பற்றி நாம் விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும்: அதிக துர்நாற்றம் உள்ள இடங்களிலும் அதிக நறுமணம் உள்ள இடங்களிலும் ஈக்களின் வேலை அதிகம். முதலில் பறந்து வரும்' பின் தைலத்தை மொய்த்துவிட்டுப் போய்விடும். இப்படிப் பலதடவை செய்வதால் அது இறுதியில் பறந்துபோய்விடும் என்று நினைப்போம். இல்லை, அது தைலத்தில் விழுந்து விடுகிறது. உயிருள்ள ஈ செத்த ஈயாக மாறுகிறது. அது பின்னர் நறுமணம் கமழும் தைலக் குப்பியை துர்நாற்றம் அடிக்க வைத்துவிடும். சமுதாயத்தில் பொதுவாகத் தீமையானது என்று கருதப்படும் சில கெட்ட பழக்கங்களைக் கிறிஸ்தவர்கள், அதிலும்

முன்னணியில் இருப்பவர்கள் கடைப்பிடிப்பது என் மனதை வேதனைப்படுத்தும் செயல்களில் ஒன்று. தட்டிக்கேட்டால் எதிர்வாதம் பல கோணங்களில் வரும். "இதெல்லாம் எங்களைக் கறைப்படுத்தாது. சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்துவதில் தவறில்லை' என்பார்கள். உண்மைதான். முதலில் அது உயிருள்ள ஈயாகப் பறந்து வந்து விட்டுத் தான் செல்லும். ஆனால் சிலருடைய வாழ்வில் அது செத்த ஈயாக மாறி, அந்தப் பழக்கத்தில் அடிமைப்பட்டு அதிலிருந்து மீளமுடியாத படி செய்துவிடும். உலகில் பொருட்களை அனுபவிப்பதற்கு ஒரே ஒரு பிரமாணம் தான் தெளிவாக உள்ளது. 'எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு உரிமை உண்டு ஆனால் எல்லாம் பயனுடையதாயிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு உரிமை உண்டு; ஆனால் ஒன்றுக்கும் நான் அடிமைப்படமாட்டேன்' (1 கொ. 6:12).

எனக்கு நினைவுக்கு வருகின்ற நிகழ்ச்சியைக் கூறி முடிக்க ஆசைப்படுகிறேன். ஒரு பெரிய ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது. அதன் நடுவே ஒரு யானை மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டு மணி ஓசையுடன் சென்றுகொண்டிருந்தது. அது ஒரு கோயில் யானை. ஓர் இடத்திற்கு வந்தவுடன் கூட்டத்தார் அனைவரும் 'கொல்' என்று சிரித்தார்கள். என்னவென்று விசாரித்தேன். அந்த யானை அந்த இடத்தில் வந்தபோது பக்கத்தில் கிடந்த ஒரு காய்ந்த பழத்தோலை எடுக்க தனது நடைத்திசையை விட்டுத் திரும்பினதாம். நாமும் சிரிக்கலாம். ஆனால் நம்மைப் பார்த்துச் சிரிப்பவர்களும் பலர். இயேசுகிறிஸ்துவின் புகழ்ச்சிக்காகவும், நாம் கூறும் வார்த்தைகள் எல்லா நம்பிக்கையோடும் ஏற்றுக்கொள்ளப்படவும் நாம் நம்மிடத்தில் குடிகொண்டிருக்கும் சில பழக்கங்களை, சுபாவங்களை விட்டுவிட ஆயத்தப்படுவோமா? பவுல் அப்போஸ்தலனின் வீரமுள்ள சாட்சியைப் பாருங்கள். 'இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும் நாங்கள் கிறிஸ்துவின் நற்கந்தமாயும், ஜீவ வாசனையாகவுமிருக்கிறோம்' (2 கொ. 2:16,17).

**எபிநேசர்**

---

## உபதேசம் போதும்; உதவி செய்

ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும் போது உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி நீங்கள் சமாதானத்தோடே போங்கள். குளிர் காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்துக்கு வேண்டியவைகளைக் கொடாவிட்டால் பிரயோஜனம் என்ன? யாக் 2:15,16.

# புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பின் திட்டம்

உலகில் பல மதங்களும்; கிறிஸ்தவத்தில் பல பிரிவுகளும் இருப்பது எவ்விதத்திலும் தேவனுக்குப் பிரியமாய் இருக்காது பிரிவினைகள் மாம்சத்தின் கிரியைகள் கலா. 5:19-20. ஏனவே பிரிவினைகளை அங்கீகரித்துக் கொண்டு ஆவியின் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள இயலாது. மற்றும் சமாதானக் கட்டிலும் இருக்க முடியாது எபே 4:3. கிறிஸ்து நாம் அனைவரும் ஐக்கியமாக இருக்கவேண்டும். என்று விரும்புகிறார் என்பதை அநேகர் ஏனோ உணர மறுக்கிறார்கள் யோவான் 17:21 ஐக்கியம் என்பது சிலர் நினைப்பது போன்று மேல் பூச்சான காரியங்களில் மட்டுமல்ல. சபைப் பெயர் முதல் இரட்சிப்பின் திட்டம், ஆராதனை முறை சபை அமைப்பு ஆகிய ஒவ்வொரு அம் சத்திலும் அது காணப்பட வேண்டும். அப்பொழுதான் உண்மையான ஐக்கியம் உண்டாகமுடியும். ஒன்றியம் (Union) என்பது வேறு: ஒன்றுய்யிருத்தல் (Unity) என்பது வேறு.

எம்மதமும் சம்மதம் என்பதை நாம் ஒரு போதும் ஏற்றுக் கொள்வதில்லை, அதே போல் எந்த சபையும் சம்மதம் என்பதையும் நாம் ஒரு போதும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை, அப்படி ஏற்றுக் கொள்வது தேவனுக்கும், அவருடைய சத்தியத்துக்கும் நாம் செய்யும் மரியாதைக் குறைவு என்பதில் ஐயமில்லை. அவருடைய அனந்த ஞானத்துக்கு நம்முடைய சிற்றறிவைக் கொண்டு திருத்தம் செய்ய முடியும் என்கிற மேட்டிமைச் சிந்தனையையே அது காட்டுகிறது.

கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் வந்த முதல் பெந்தேகோஸ்தே நாளில் அதாவது சுமார் கி. பி. 33ல் எருசலம் நகரில் சபை ஸ்தாபிக் கப்பட்டது. அப் 2:41-47 அது இயேசு முன்னறிவித்திருந்தபடி நடந்தது மத் 16:18 அவர் ஸ்தாபித்த சபை, அவருடைய பெயரால் அழைக்கப் படுவதுதான் நியாயம் ரோமர் 16:16 சபை என்று ஒருமையில் தான் சொன்னார். அதையே பரிசுத்த ஆவியானவரும் பல இடங்களில் உறுதி செய்கிறார். குறிப்பாக எபே 4:4 சபைக்குத் தலைவர் கிறிஸ்துவே. எபே 1:23 இரட்சகரும் அவரே. எபே 5:23, தம்முடைய விலை மதியாத இரத்தத்தால் சபையை மீட்டுக் கொண்டார். அப் 20:28. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களும் கிறிஸ்துவுக்கே கொடுக்கப் பட்டிருக்கிறது. மத் 28:18 அப்படியிருக்க திருத்துவதற்கும் சேர்த்துவதற்கும், குறைப்பதற்கும் தனி மனிதனுக்கோ, குழுவுக்கோ ஒரு கூட்டத்துக்கோ ஏது உரிமை?

பிசாசு அநேகருடைய மனக் கண்களை குருடாக்கி விட்டபடியால் (2 கொரி 4:4) தெய்வீக வெளிப்பாடாகிய சத்தியத்துக்கும், மனித ஞானத்தால் கறைப்பட்டிருக்கிற சத்தியத்துக்கும் வித்தியாசம்

தெரியாதபடி குழப்பம் அடைந்துள்ளனர். எல்லோரும் இயேசுவைத் தானே போதிக்கிறார்கள். நமக்குச் சௌகரியமான ஏதோ ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டியது தானே என்று அப்பாவித்தனமாக எண்ணி மோசம் போகிறார்கள். பாலும், கள்ளும் ஒரே நிறம் என்பதால் பாலை அருந்துவதற்கு பதிலாக கள்ளை அருந்துபவனுடைய நிலையில் மக்கள் இருக்கிறார்கள். கள் அருந்தினவன் தடுமாறி தள்ளாடி நடக்கிறான். கள்ள போதகங்களைக் கேட்டு மயங்கினவர்கள் ஆன்மாவிலே குழப்பம் அடைந்து விசுவாசத்தில் தள்ளாடித் தடுமாறுகின்றனர்.

இதை வாசிக்கும் நண்பரே! சகோதரியே! சிந்தியுங்கள். தெளிவடையுங்கள். புதிய ஏற்பாட்டு இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக்கொண்டு இரட்சிப்படையுங்கள். புதிய ஏற்பாட்டுத் திட்டத்தின்படி ஆவியோடும் உண்மையோடும் தேவனை ஆராதிக்க முன் வாருங்கள். புதிய ஏற்பாட்டு மாதிரியைப் பின்பற்றுகிற கிறிஸ்துவின் சபையில் அங்கமாகுங்கள். பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடு பிடுங்கப்படும். காலம் சமீபித்துக் கொண்டிருக்கிறது. மத் 15:13.

**D. சாமுவேல்ராஜ்**

---

## கவலையை விடு; கடவுளைப்பிடி

அனாவசியமாய் அலட்டிக் கொள்ளவேண்டாம் கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு.

என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் உயிருக்காகவும் என்னத்தை உடுப்போம் என்று உங்கள் உடலுக்காகவும் கவலைபட வேண்டாம்.

மனிதா! சிந்தித்துப்பார் எது முக்கியம்?
உணவா? உயிரா?
உடையா? உடலா?

பறவை இனத்தைக் கவனித்தாயா? அவைகள் விதைக்கிறதில்லை, அறுக்கிறதில்லை. களஞ்சியங்களில் சேமிப்பதும் இல்லை, ஆனால் அவைகள் வாழ்ந்து கொண்டுதானே இருக்கின்றன. ஐந்து அறிவு படைத்த அவைகளை விட ஆறறிவு படைத்த மனிதன் உயர்ந்தவன் என்பது இறைவனுக்குத் தெரியாதா?

பின்னே, ஏன் வீண் கவலை? உடையைப் பற்றிக் கவலைப்படுகிறாயே! காட்டில் பூக்கும் வண்ண, வண்ண பூக்களைப் பார்க்கிறாயே அவைகளின் ஆயுட் காலம் எவ்வளவு? பொழுது புலர்ந்து பொழுது சாய்வதற்குள் வாடிவதங்கி விடுகின்றன. ஆனால் அரசர்களிலேயே புகழ் பெற்றவன் சாலமோன் என்பவன். உடுப்பது உள்பட பல்வேறு காரியங்களில் நிகரற்றவன் என்று பலர் அவனைப்பாராட்டுகின்றனர். அவனே கூட அந்த அற்பப் பூக்களின் வண்ணங்களுக்கு ஒப்பான உடைகள் அணிந்தது கிடையாது. அந்த உயிரற்ற தாவரத்தைக் காட்டிலும் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட மனிதன் சிறந்தவன் என்பதை ஆண்டவர் மறந்து விடுவாரா?

உன் தேவைகளை அவர் அறிவார். ஆனால் உனக்குத்தான் அவருடைய அன்பும் வல்லமையும் தெரிவதில்லை. முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் மற்றவைகள் அனைத்தையும் அவர் பார்த்துக்கொள்வார்.

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH**—The Voice of Truth—Speakers: Reggle Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9 : 00 to 9 : 15 P. M'
Fridays-7 : 45 to 8 : 00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker: Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9 : 00 to 9 : 15 P. M.
Thursdays-9 : 00 to : 9 : 15 P. M.
Fridays-9 : 00 to 9 : 15 P. M.
Sundays-12 : 45 to 1 : 00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker: Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2 : 30 to 2 : 45 P. M.
Tuesdays-2 : 30 to 2 ; 45 P. M.
Thursdays-2 : 30 to 2 : 45 P. M.
Fridays-2 : 30 to 2 : 45 P. M.
Saturdays-2 : 30 to 2 : 45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker: P. R. Swamy.
All correspondence should be sent to Tne Way of Truth, Post Box 8405, Bangalore-550084.
Tuesdays-5 : 30 to 5 : 45 P. M.
Thursdays-6 : 45 to 7 : 00 P M.
Sundays-6 : 45 to 7 : 00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker: P. K. Varghese
All coreespondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala)
Tuesdoys, 3 : 45 to 4 : 00 P. M.
Fridays-3 : 45 to 4 : 00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondcnce Courses and Christian Literature are available in these different languages from tne addresses listed. Also the radio sermons are avaiiable in book form.

---

இந்த இதழ் தனிச் சுற்றுக்கு மட்டும்.

# வாசக அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு!

உங்களுக்கோ அல்லது நீங்கள் முகவரி கொடுத்த யாருக்காவதோ இதழ்கள் வந்து சேரா விட்டாலும் ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்து கொண்டிருந்தாலும் தயவு செய்து எங்களுக்கு எழுதுங்கள்.

ஒவ்வொரு மாதம் 20-ம் நாள் அன்று இதழ் வெளி வருகிறது. 25-ம் நாளுக்குள் இதழ்கள் வந்து சேராவிட்டால் எங்களுக்கு ஒரு அஞ்சல் அட்டை மூலம் தெரிவியுங்கள். நன்றி!

ஆசிரியர்

Edited and Published by E. Z. Selvanayagam and Printed by Sri. Vela E. V. Arasamanickam, at Vela Printers, Erode-638 001.
Phone : 74878

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to :

The Editor
THIRUMARAI AASAAN,
2, Manal Medu Street,
ERODE-638 002.